சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

அசல் வழக்கு எண்.125/2021

29.01.2026

பி.வா.சா.2 திரு. சண்முகம், த/பெ. கிருஷ்ணன்

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

இந்த வழக்கை ராஜேந்திரன் குருமூர்த்தி என்பவர் மீது தாக்கல் செய்துள்ளார். குருமூர்த்தி, ராஜேந்திரன் என்பவர் சொத்தை ஆக்கிரமனம் செய்ததாக கூறி வழக்கு தாக்கல் செய்துள்ளார். வழக்கு சொத்தின் சர்வே எண், விஸ்தீரணம், நான்கெல்லை எனக்கு தெரியாது. தாவா சொத்து சம்பந்தமாக ஆவணங்கள் எதையும் நான் பார்க்கவில்லை. குருமூர்த்திக்கு சொந்த ஊர் எது என்றால் எனக்கு தெரியாது. குருமூர்த்தி வசிக்கும் ஊரில் அவர் பெயரில் சொத்துக்கள் எதுவும் வாங்கினாரா என்றால் இல்லை. குருமூர்த்தி, ராஜீவ்காந்தி பெயரில் சொத்துக்கள் எதுவும் வாங்கினாரா என்றால் இல்லை. தாவா சொத்துள்ள வீட்டை நான் அளந்து பார்க்கவில்லை. தாவா சொத்து யாருக்கு பாத்தியப்பட்டது என்பது எனக்கு தெரியாது என்றாலும், குருமூர்த்தி அழைத்ததன் பேரில் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து குறித்து எந்தவிவரமும் தெரியாமல் சாட்சியமளிப்பது ஏற்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.